# கேரளத் தேயிலைத் தோட்ட மக்களின் வரலாறும் வாழ்க்கைச்சூழலும்

*முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்*
பேராசிரியர், தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

### தேயிலையின் தொடக்கம்

உலகம் முழுவதும் மக்கள் தேனீர், காபி, கோகோ ஆகிய பானங்களைச் சூடாக அருந்துகின்றனர். இவற்றில் தேனீர் அதிகமாக மக்களால் விரும்பி அருந்தப்படுகிறது. உலகில் ஒருநாளில் ஏறக்குறைய 800 மில்லியன் குவளைத் தேனீரை மக்கள் அருந்துகின்றனர் என்று ஆய்வுக்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கி.பி.2737-இல் தேயிலையின் உற்பத்தி, சீனாவில் தொடங்கியது. “சீனாவின் புகழ் பெற்ற அரசர்களில் ஒருவரான சென்நங் என்பவர் ஒரு நாள் தண்ணீர் குடிப்பதற்குத் தண்ணீரைக் கொதிக்க வைத்ததாகவும், அப்போது அருகிலிருந்த மரத்தின் இலைகள் பாத்திரத்தில் விழுந்து தண்ணீரின் நிறம் மாறியதாகவும், அதுவே தேயிலை என்று அறியப்படுவதாகவும் பழம்பெரும் சீனக்கதைகூறுகிறது.

கி.பி. 1774-ஆம் ஆண்டு இந்தியாவில் தேயிலை அறிமுகமானது. இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன்ஹேஸ்டிங் காலத்தில் தேயிலை விதைகள், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் கல்கத்தாவில் உள்ள தாவரவியல் பூங்காவில் பயிரிடப்பட்டன. தற்போது உலக அரங்கில் தேயிலை உற்பத்தியிலும் பயன்பாட்டிலும் இந்தியா முதலிடம் வகிக்கிறது. 98 விழுக்காடு தேயிலை அசாம், மேற்கு வங்காளம், கேரளம். தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.

### கேரளத்தில் தேயிலை வேளாண்மை

கேரளத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையின் தொடர்ச்சியாக அமைந்துள்ள இடுக்கி, பாலக்காடு, வயநாடு ஆகிய மாவட்டங்களில் முப்பத்துநாலாயிரத்து எழுநூற்று அறுபது ஹெக்டேர் (34760) நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 300 முதல் 3000 மீட்டர் உயரத்திலும், 10 முதல் 33 விழுக்காடு சரிவிலும் இது பயிரிடப்படுகிறது. ஒரு சில இடங்கிளல் 50 விழுக்காடு சரிவிலும் காணலாம்.

வட இந்திய மற்றும் தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்கிலேயர்களால் 1770-ஆம் ஆண்டிற்கு முன்பே தேயிலை?? பயிரிடப்பட்டாலும், கேரளத்தில் இடுக்கி மாவட்டம் தேவிகுளம் பகுதியில்தான் 1864-ஆம் ஆண்டு தேயிலை முதன் முதலாகப் பயிரிடப்பட்டது. இதற்குப் பின்புதான் கேரளத்தின் பிற பகுதிகளில் தேயிலை பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கேரளத்தில் தேயிலை வேளாண்மை தொடங்கப்பட்ட இடங்களும், வருடங்களும் பின் வருமாறு:

1. இடுக்கி மாவட்டம் - 1868
2. வயநாடு மாவட்டம் - 1887
3. ஆனைமலை - 1897
4. மத்திய திருவிதாங்கூர் - 1875

1870-80 கால கட்டங்களில் பெரிய பாலான வனங்கள் அழிக்கப்பட்டுத் தேயிலை பயிரிடப்பட்டது. தேயிலை வேளாண்மையில் இலைகள் பறித்தல் மிகவும் முக்கியமான வேலையாகும். ஒருமுறை பயிர் செய்யப்பட்ட தேயிலைச் செடியிலிருந்து எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்குப் பின் இலைகளைப் பறிக்கலாம். முற்றிய இலைகளை விடுத்து இளம் தளிர் இலைகள் மட்டும் பறிக்கப்பட்டுத் தேயிலை உண்டாக்கப்படுகிறது.

இலைகள் பறிக்கும் நிகழ்வைக் கொழுந்து எடுத்தல் என்று வழங்குகின்றனர். தேயிலை வேளாண்மையில் “கவாத்து” செய்வதும் ஒரு இன்றியமையாத வேலையாகும். இது செடியைக் கொழுந்து எடுப்பதற்கு வசதியாக மேல்மட்டத்தில் வெட்டி விடும் நிகழ்வாகும்.

கவாத்துக்குப்பின் செடி மீண்டும் தளிர்விட 90 முதல் 120 நாட்கள் வரை ஆகின்றது. எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்குப்பின் கொழுந்து எடுக்கப் படுகிறது.

## தேயிலைத்தோட்ட மக்கள்

கேரளத்தில் தேயிலை வேளாண்மை தொடங்கப்பட்ட 1870 காலக்கட்டங்களில் தேயிலை பயிரிடுவதிலும், அதன் வளர்ச்சியிலும் முழு அளவில் தமிழர்களே ஈடுபடுத்தப்பட்டனர். தமிழகத்திலுள்ள திருநெல்வேலி, மதுரை, செங்கல்பட்டு, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலிருந்து வெள்ளையர்களின் முகவர்கள் என்று அறியப்பட்ட கங்காணிமார்களால் இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

## தொடக்க கால வரலாறு

கி.பி.1870-ஆம் ஆண்டிலிருந்து கட்டம் கட்டமாகத் தமிழ் மக்கள் கேரளத் தேயிலைத் தோட்டப் பகுதிகளுக்கு வந்துள்ளனர். 1900 ஆம் ஆண்டிற்குப்பின்பு தொழிலாளர்களின் வருகை அதிகரித்து வந்துள்ளதாக மூணார் கிராம பஞ்சாயத்து அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த அறிக்கையின்படி 1970 ஆம் ஆண்டு 0.40 இலட்சம் மக்களும் 1919 ஆம் ஆண்டு 1.5 இலட்சம் மக்களும் 1940களில் 1.6 இலட்சம் மக்களும் கூட்டமாக தமிழக மாவட்டங்களிலிருந்து அழைத்து வரப் பட்டதாகத் தெரிய வருகின்றது.

கேரளத்தேயிலைத்தோட்டங்களில்நல்ல சம்பளமும் வசதிகளும் இருப்பதாகக் கூறிக் கங்காணிமார்கள் இவர்களை அழைத்து வந்தனர். தமது சொந்த ஊர்களிலிருந்து நான்கு அல்லது ஐந்து நாட்கள் சுமார் 400 கிலோமீட்டர் நடத்தியே அழைத்து வரப்பட்டனர். தமிழகத்திலிருந்து கங்காணி மார்களால் ஏமாற்றிக்கொண்டு வரப்பட்ட தொழிலாளிகளைப் பல நிலைகளிலும் கொடுமைப்படுத்தினர்; கொத்தடிமைகளாக நடத்தப்பட்டனர். ஆனால் மலையாள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட கேரள மக்கள் குறைவாகவே தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளி சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நட்பு முறிச்சட்டம்

1859ஆம் ஆண்டு வெள்ளையர்களால் கொண்டு வரப்பட்ட நட்பு முறிச்சட்டம் தமிழர்களை வேலைக்குக் கொண்டு வரப் பேருதவியாக இருந்தது. தமிழகத்தில் அன்றைய ஜமீன்கள் மற்றும் சிற்றரசர்களாக வாழ்ந்த பண்ணையார்கள் போன்றவர் களிடத்தில் வேலை செய்த தமிழ் மக்களைத் தேயிலை விவசாயத் தொழிலுக்கு ஜமீன்கள் அனுப்பி வைத்தனர். இதற்குக் கைமாறாக வெள்ளையர்களிடம் இருந்து வெகுமதி பெற்றுக்கொண்டனர்.

இச்சட்டப்படி கொத்தடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்தாலோ, ஒப்பந்தத்தை மீறினாலோ, அச்சுறுத்தல், சித்திரவதை செய்தல், இழப்பீட்டை வசூலித்தல் போன்ற எதையும் செய்ய நிர்வாகத்திற்கு அனுமதி அளித்தது. இதனால் தேயிலைத் தோட்டங்களில் வேலைக்காரர்களாக வந்த தமிழர்கள் தம் தாய்க் கிராமங்களை அறவே மறக்க வேண்டிய சூழ்நிலையை வெள்ளையர்களும், கங்காணிமார்களும் உருவாக்கினார்கள்.

## தப்பிச் செல்லுதல்

தேயிலைத் தோட்டங்களில் காணப்பட்ட கொடிய கால நிலையும், கடின வேலைப்பளுவும், குறைந்த வாழ்க்கை வசதிகளும் தொழிலாளிகள் ஓடிப்போகக் காரணமாக இருந்தன. கொடுமைகளைத் தாங்கமுடியாத சில தொழிலாளிகள் நடைப் பயணமாக அடர்ந்த காடுகளினூடே தமிழகத்திற்குத் தப்பிச் சென்றனர். அவ்வாறு சென்ற பலரும் வழியிலேயே இறந்தனர். பலர் பாதி வழியிலேயே கண்டுபிடிக்கப் பட்டுச் சித்திரவதைசெய்யப்பட்டனர். தப்பிச் சென்று பிடிப்பட்டவர்களைப் பிற தொழிலாளர்களின் முன்பு வைத்து அடித்துக் கொடுமைப்படுத்திச் சித்திரவதை செய்ததால், தொழிலாளர்கள் தப்பித்துச் செல்வதைத் தவிர்த்தனர்.

## சமுதாயம்

கேரளத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் 90 விழுக்காடு தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களும், மலைஜாதி மக்களுமாவர். பெரும்பான்மையானவர்கள் பள்ளர், பறையர், சக்கிலியர், வண்ணார் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாவர். 10 விழுக்காடு நாயக்கர், சென்னார், மறவர், நாடார், கிறித்தவ மதம் மாறியவர்கள் போன்ற இனத்தவர்களும் தொழிலாளர்களாக உள்ளனர். தேயிலைக் காடுகளோடு சேர்ந்த காட்டுப்பகுதிகளில் பளியர், காடர், ஊராளர், முதுவர் போன்ற பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். வட இந்தியர்கள் மேலாளர்களாகவும் தமிழ்நாடு, கேரள மாநிலங்களைச் சேர்ந்த உயர் சாதியினர்அதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர்.

## பொருளாதாரம்

இந்திய விடுதலைக்குப் பின்பு தொழிலாளர்களின் வேலை, வரவு செலவு, கடன் போன்ற கணக்குகளைக் கங்காணி மார்களே கவனித்து வந்தார்கள். கங்காணிகள், தொழிலாளர்களின் சம்பளத்தைப் பெற்றுத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அவர்களுக்கு வேண்டிய பொருட்களை மட்டும் வாங்கிக் கொடுத்தனர். இதனால் உணவு, உடை, உறைவிடத்திற்குப் பிறரையே தொழிலாளர்கள் சார்ந்து வாழ்ந்தனர்.

## கருப்புப் பிரதி, வெள்ளைப்பிரதி

தொழிலாளர்களுக்குப் பிரதி (Pay Slip) வழங்கும் முறை அன்றும் இருந்தது. ஆனால் கருப்புப் பிரதி வெள்ளைப்பிரதி என்ற இரண்டு வகைப் பிரதிகள் வழக்கில்

இருந்தன. இப்பிரதிகள் கங்காணிமார்களின் வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டன. கருப்புப் பிரதி, கொடுத்தால் அந்தத் தொழிலாளி கடனில் இருக்கிறார் என்பது பொருள். அவர் கடன் தீரும் வரை அதே கங்காணியிடம் வேலை செய்தாக வேண்டும்.

வெள்ளைப்பிரதி கொடுத்தால் அந்தத் தொழிலாளர்க்கு ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ மீதியுள்ளதாகப் பொருள்.

பெரும்பான்மையான தொழிலாளர்களுக்குக் கங்காணிமார்கள் கருப்பு பிரதியே வாங்கிக் கொடுப்பார்கள். வெள்ளைப் பிரதி வாங்குபவர்கள் பெரும்பாலும் கங்காணிமார்களின் உறவினர்களாகவே இருப்பார்கள்.

**ஐயா, கங்காணி, வியாபாரி ஆகியோரின் கள்ளக்கணக்கு**

ஐயாமார்கள் (Field officers) கங்காணிகள் கூறுவது போன்று கணக்கு எழுதிக்கொடுத்து கமிஷன் பெற்றுக்கொள்வார்கள். தொழிலாளி தன் விருப்பப்படி எந்தப் பொருளையும் கடையில் இருந்து வாங்க முடியாது.

எடுத்துக்காட்டாக, இரவு 7 மணிக்கு வேலை முடிந்து வீடு திரும்பும் ஒரு தொழிலாளி சமையலுக்கு எந்தெந்தப் பொருட்கள் வேண்டுமென்று பொடியனிடம் கூற (கங்காணி, ஐயா, துரை போன்றோருக்கு எடுபிடி வேலை செய்யும் தொழிலாளிக்குப் பொடியன் என்று பெயர்) வேண்டும்.

பொடியன் சப்பைக் கங்காணி (Asst. Supervisor) யிடம் கூற அவர் கங்காணியிடம் கூறுவார். கங்காணி ஒரு தாளில் (List) எழுதிக் கொடுத்தபிறகுதான் சமையலுக்குத் தேவையான பொருட்களை வாங்க முடியும். அதிலும் தனது விருப்பப்படி பொருட்களை மொத்தமாக வாங்கி வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது. காரணம் சாப்பாட்டுப் பொருட்கள் வீட்டில் இருந்தால் தொழிலாளர்கள் வேலைக்கு வரமாட்டார்கள் என்ற அச்சம் கங்காணிமார்களிடம் இருந்தது. விடுப்பு எடுக்காமல் வேலைக்குச் செல்லும் தொழிலாளிக்கு மட்டுமே சமையல் பொருட்கள் வாங்க அனுமதி கொடுக்கப்பட்டது.

கங்காணிமார்களிடம் ஒரு கிலோ கோதுமை கேட்டால், அவர் அரைக்கிலோ கோதுமை எழுதுவார். கடைக்காரர் அதைக் கால் கிலோவாகத் தருவார். ஏன் என்று கேட்க முடியாது. கேட்டால் அடி, உதை விழுவதோடு வேலையும் நிறுத்தப்படும்.

தொழிலாளர்களின் வரவு செலவு கணக்கு கீழ்க்காணும் முறையில் எழுதப்பட்டது.

1. வெள்ளைக்கோதுமை - 1/2
2. கருப்புக்கோதுமை - 1/2
3. காட்டுக் கம்பளி - 10 ரூபாய்
4. கருப்புக் கம்பளி - 10 ரூபாய்
5. உருளைக்கிழங்கு - 1/2 கிலோ
6. தோல் உருளை - 1/2 கிலோ

இதில் 1/2 கிலோ கோதுமை மட்டும் தொழிலாளிக்கு வழங்கப்பட்டிருக்கும். ஆனால் இரண்டு முறை (வெள்ளைக் கோதுமை 1/2 கிலோ, கருப்புக் கோதுமை 1/2 கிலோ) வாங்கியதாகத் தொழிலாளி கணக்கில் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு இந்திய விடுதலைக்கு முன்பு கல்வி அறிவு இல்லாத தொழிலாளர்கள் பல நிலைகளிலும் ஏமாற்றப்பட்டனர். இதனால் பின் தங்கிய பொருளாதார நிலையிலும், அரைவயிற்றுப் பட்டினியோடும் தொழிலாளர்கள் வாழ்ந்ததாகத் தெரிய வருகின்றது.

இன்று கேரளத்தில் உள்ள எல்லாத் தேயிலைத் தோட்டங்களையும் தனியார் முதலாளிகளே நிர்வகித்து வருகின்றனர். சிலவற்றில் மட்டும் மாற்றம் ஏற்பட்டாலும் தொடக்கக்காலத்தில் இருந்த முறைகளும், கட்டங்களும் இன்னும் தொழிலாளர்கள் மீது சுமத்தப்படுகின்றன.

பணி ஓய்வு பெற்ற பின்பும் தற்காலிகத் தொழிலாளிகளாகப் பலர் தேயிலைத் தோட்டங்களில் இன்பம் வேலை செய்வதைக் காணலாம். இது, இவர்களின் பின்தங்கிய பொருளாதார நிலையைக் காட்டுகிறது.

**மாதச் சம்பளம்**

தொழிலாளர் சட்டப்படி நாள் ஒன்றுக்கு 14 கிலோ தேயிலை இலைகளை ஒரு தொழிலாளி பறிக்க வேண்டும். இதற்குத் தற்போது 400 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. எல்லாப் பிடிப்புகளும் கழித்து மாதச் சம்பளமாக 2000 முதல் 2500 ரூபாய் மட்டும் பெறுகின்றனர். மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்பளம் வழங்கும் பல தேயிலைத் தோட்டங்கள் கேரளத்தில் இன்றும் உள்ளன.

**தொழிற்சங்கம்**

அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கங்கள் தேயிலைத் தோட்டங்களில் இயங்கி வருகின்றன. மக்களின் பிரச்சினைகளில் தொழிற்சங்கங்களின் செயல்பாட மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்றே கூறலாம். பெரும்பாலான தொழிற்சங்கங்கள் முதலாளிகளின் கைப்பாவையாகச் செயல்பட்டு வருகின்றன.

**கல்வி**

கேரளத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் 95 விழுக்காடு தொழிலாளர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள். சிலர் ஒன்று அல்லது இரண்டாம் வகுப்புவரை மட்டுமே படித்துள்ளனர். பலர் தேயிலைத் தோட்டங்களிலும் ஆரம்பப் பாடசாலைகள் மட்டுமே உள்ளன.

குடும்பப் பொருளாதார நிலை பின்தங்கி இருப்பதால் பதினைந்து வயதானவுடன் தங்கள் பிள்ளைகளைத் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளியாகச் சேர்த்து விடுகின்றனர்.

பல தேயிலைத் தோட்டங்களிலும் ஆரம்பக்கல்வி, கொடுக்கப்பட்டாலும் உயர்கல்விக்கு வெளி இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஒரு சில தேயிலைத் தோட்டங்களில் கேரள அரசின் உயர்நிலைப் பள்ளிகள் அமைதுள்ளன. மொழிச் சிறுபான்மையினராகையால் மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்கள், சரிவரக் கொடுக்கப்படுவதில்லை. ஆசிரியர்களையும் சரியான நேரத்தில் நியமிப்பதில்லை.

தேயிலைத் தோட்டங்களில் அமைந்துள்ள பல தமிழ்ப் பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு அரசாங்கத் தேர்வில் 200 மாணவர்கள் தேர்வு எழுதினால் வெறும் 25 அல்லது 50 மாணவர்கள் மட்டுமே வெற்றிபெறுகின்றனர். உயிரைக் காப்பற்றுவதைத்தவிர வேறு துறைகளில் கவனம் செலுத்த முடியாத நிலையிலேயே இன்றும் இம்மக்களின் வாழ்க்கை அமைந்துள்ளது.

**பண்பாடு**

மொழி, இனம், பழக்கவழக்கம், நிதி, போக்குவரத்து, கொடுக்கல் வாங்கல், உணவுமுறை, சடங்குகள் முதலான எல்லா நிலையிலும் இங்குள்ள தொழிலாளர்களின் பண்பாடு தமிழகத்தோடிணைந்தே காணப்படுகின்றது.

**லயம்**

தொழிலளர்களின் குடியிருப்புகள் “லயம்” என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. இவை தேயிலை தோட்டத் நிர்வாகத்திற்குச் சொந்தமானவை. ஒரு லயத்தில் எட்டு முதல் பதினைந்து வீடுகள் வரை காணப்படும். ஒரு வீட்டில் சிறிய அறை ஒன்றும் அடுக்களை ஒன்றும் காணப்படும். இவ்வீடுகளில் தொழலாளர்கள், சாதி, மத வேறுபாடின்றி வாழ்கின்றனர். சாதி உணர்வு, தீண்டாமை போன்றவை இப்பகுதி மக்களிடத்தில் காணப்படவில்லையென்றாலும் கலப்புத் திருமணம் செய்து கொள்வதில்லை.

**பழக்க வழக்கங்களும் சடங்கு முறைகளும்**

மொழிலாளர்களின் பழக்கவழக்கங்களும் சடங்கு முறைகளும், தமிழகத்தில் வழங்கும் சடங்கு முறைகளோடு ஒத்துக் கொணப்படுகின்றன. தமிழர் பண்டிகையான பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். மாரியம்மன், காளி, முருகன், கருப்பசாமி, சுடலை மாடன் போன்ற சிறுதெய்வங்களைத் தங்கள் குல தெய்வங்களாக வழிபடுகின்றனர்.

**நாட்டுப் பாடல்கள்**

தொழிலாளர்களிடையே நாட்டுப்புறப் பாடல்களும் வழங்குகின்றன. இவை அவர்களின் துன்பங்களை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. பெரும்பாலான பாடல்கள் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் கங்காணிகள், அதிகாரிகள், மேலாளர்கள் போன்றோரின் செயல்பாடுகளைச் சுட்டுவதாக அமைந்துள்ளன.

*(எ.டு)*

1. கங்காணி கங்காணி
   கருப்புக் கோட்டு கங்காணி
   கணிடிப்புடன் நிற்கிறானே
   கொடுமக்கார கங்காணி
2. கங்காணி காட்டுக்குள்ள
   கண்டக்டர் ஐயா ரோட்டுமேல
3. விழுந்தடிச்சு கொழுந்தெடுத்தேன்
   கொறச்சு ராத்த போட்டுட்டானே

இவ்வாறு கேரளத் தேயிலைத் தோட்ட மக்களின் வரலாறும் வாழ்க்கைச்சூழலும் அமைந்துள்ளன.

**பார்வை நூல்கள்**

1. நவசோதி.க., இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளரின் வரலாற்றினை ஆய்ந்து தேர்வதற்குரிய மூலாதாரமாக நாட்டுப் பாடல்கள் வகிக்கும் இடம், இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், 1971.
2. மூணார் கிராம பஞ்சாயத்து, பஞ்சாயத்தின் வளர்ச்சித் திட்ட அறிக்கை, 1995.
3. தாமு.டி. (பதி), டாடா டீ செய்திகள், மாத வெளியீடு, 1994-1999
4. Danial P.H.,Red Tea 2nd Edition, Pandian Printing Works, 1984.
5. Ravirama, Labour Under Imperial Hegemony, The Case of Tea Plantations in south Indis. C.D.S Trivandrum, 1970.